நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 137/2026

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சரோஜா |
| தந்தை / கணவர் பெயர் | : | முத்துசாமி |
| கிராமம் | : | மூலக்காடு |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 45 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம்,மே மாதம், 07–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–04.16 PM

1. நான் தற்போது மூலக்காட்டில் குடியிருந்து கட்டிடவேலை செய்து வருகிறார். ஆஜர் எதிரி என் கணவர் ஆவார். சுமார் 4 மாதத்திற்கு முன்பு ஒருநாள் இரவு 01.00 மணிக்கு வேலைக்கு சென்றுவிட்டு வீட்டில் இருந்தபேது ஆஜர் எதிரியான எனது கணவர் நான் அப்படித்தான் குடிப்பேன். என்னை எதுவும்

கேட்கக்கூடாது. நீ எனது வீட்டில் இருக்க கூடாது என்றும், கிளம்பு என்றும் பிரச்சனை செய்தார்.

2. நான் எங்கும் போகமாட்டேன் இங்கே தான் இருப்பேன் என்று எனது கணவரிடம் சொன்னேன். அதற்கு எனது கணவர் இருக்ககூடாது போ, நான் என்ன வேணாலும் செய்வேன் நீ போ என்று சொன்னார். நான் மறுத்ததும் கையால் என் கண்ணத்தில் அறைந்தார். தொண்ணை எடுத்துக்கொண்டு என்னை அடிக்க வரும்போது நான் விலகிக்கொள்ள ஜன்னல் கண்ணாடியில்பட்டு ஜன்னல் கண்ணாடி உடைந்து விட்டது.

3. எனது மகன் ராமகிருஷ்ணன் அன்று சென்னை சென்றிருந்ததால் என்னால் வெளியே வரமுடியவில்லை. எனது கணவர் குடிப்போதையில் மிதந்துக்கொண்டு தடியை வைத்துக்கொண்டு என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி வீட்டு வாசலில் நின்றுக்கொண்டிருந்தார். அதனால் நான் வெளியே வராமல் அவசர உதவி எண்ணுக்கு தொடர்பு கொண்டு சம்பவம் தொடர்பாக தகவல் சொன்னேன். தகவலறிந்து கொளத்தூர் காவல் நிலையத்தில் இருந்து போலீசார் வந்தார்கள். வழக்கமாக எனது கணவர் குடித்துவிட்டு வந்து என்னிடம் பிரச்சனை செய்வது வழக்கம். மேற்படி சம்பவத்திற்கு ஒருவாரத்திற்கு முன்னால் இரும்பு ராடை எடுத்து வலதுக்கையில் அடித்ததில் எலும்பு உடைந்துவிட்டது.

4. எனது வீட்டுக்கு வந்தபோலீசார் எனது கணவரை புத்திமதி கூறி மிரட்டிவிட்டு சென்றனர். ஆனால் அதற்கு பயப்படாமல் மீண்டும் சென்று மதுஅருந்திவிட்டு வந்ததால் காலையில் 07.00 மணிக்கு கொளத்தூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவம் எனது வீட்டிற்குள்தான் நடந்தது. எனது கணவரை எப்படியாவது வழக்கு கொடுத்து உள்ளே தள்ளிவிடவேண்டும் என்ற எண்ணத்தில்தான் இந்த வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என்னால் அடி வாங்கி கொண்டும், உதை வாங்கி கொண்டும் அதை பொறுத்து கொண்டும் என்னால் வாழ

முடியவில்லை. சம்பவத்தின் போது வீட்டில் நான் மட்டும்தான் இருந்ததேன். வேறு யாரும் அங்கு இல்லை.

2. சம்பவ சமயத்தில் நான், எனது வீட்டுகாரர் தவிர வேறு யாரும் வீட்டில் இல்லை. சம்பவ நடந்த இரவு 1.00 மணிக்கு போலீசார் வந்து எனது கணவரை மிரட்டி விட்டு சென்று விட்டனர். அவரை கூட்டிச் செல்லவில்லை. சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னால் என்னை இரும்பு ராடால் அடித்தது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை.

3. இதற்கு முன்பாக இதே போல் எனது கணவர் அடித்து தகராறு செய்தது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். அவர்கள் சமாதானம் செய்து அனுப்பி வைத்துவிடுவார்கள். காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க செல்லும் போது நான் மட்டும்தான் சென்றேன். புகாரை நான் சொல்ல சொல்ல எழுதினார்கள். முதல் விசாரணையில் சொல்ல சங்கதிகளைதான் காவல் துறை விசாரணையிலும் சொன்னேன்.

4. கண்ணாடி உடைந்த விவரத்தை காவல் துறையினர் விசாரணையில் சொல்லியுள்ளேன். காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு வந்த பிறகு போலீசார் என்னை விசாரித்தனர். எனக்கும், எனது கணவருக்கும் உள்ள குடும்ப பிரச்சனை காரணமாக என் கணவர் மீது நான் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றாலும், உண்மையில் நான் சொன்னவாறு சம்பவம் நடைபெற்றிருந்தால் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றிருப்பேன் என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 4.45 P.M.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**